## மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2017

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காதமையினால் ரூபா 200,803,590 கிரயமுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், மேலும் அவை பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைய, இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிட்டு பிழையினை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டு தொடர்பில் நிலையான வைப்புக்களுக்கு பெற வெண்டிய வட்டி ரூபா 4,185,734 ஆகக் காணப்பட்டிருந்த போதிலும், கணக்குகளில் அது ரூபா 4,242,400 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையினால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்தின் பெறுமதி மற்றும் வட்டி வருமானத்தின் பெறுமதி ரூபா 56,666 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,755,600 நிலையான வைப்புக்கள் தொடர்பில் ஆண்டின் போது காசாகப் பெறப்பட்ட ரூபா 136,690 தொகையான வட்டி வருமானம், ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக தங்க வெகுமதி நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், நிலையான வைப்புக்களுக்கு பெறவேண்டிய ரூபா 196,411 வட்டி வருமானம் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளித்தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் ரூபா 34,474,459 தொகையான திரண்ட பெறுமதி தொடர்புடைய காலப்பகுதியின் வருமானமொன்றாக கணக்கிடுவதற்குப் பதிலாக உரிமையின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 930,158,256 தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், நிறுவகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம், அந்த பெறுமதி ரூபா 638,069,739 ஆகக் காணப்பட்டிருந்தமையினால் ரூபா 292,088,517 விததியாசமொன்றைக் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு வகைகளுக்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட ஆவணங்க்ள கணக்காய்விற்கு கிடைக்ககூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| கணக்குகளின் வகை | | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | இருப்பு முற்பணங்களின் சரிப்படுத்தல்கள் | 523,345 | வயதுப் பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டியல்கள் |
| (ஆ) | செலுத்த வேண்டிய ஆய்வுக்கான மானியங்கள் | 4,719,075 | வயதுப் பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டியல்கள் |
| (இ) | செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணங்கள் | 2,151,006 | வயதுப் பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டியல்கள் |
| (ஈ) | பெறவேண்டிய கட்டணங்கள் | 48,456,455 | வயதுப் பகுப்பாய்வு மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (உ) | முதலீடுகள் மீதான வட்டி | 15,604,602 | விபரமான பட்டியல்கள் |
| (ஊ) | ஒப்பந்தஞ்செய்யப்பட்ட சேவைகள் | 1,296,000 | முறையான எழுத்துமூலமான உடன்படிக்கைகள் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் வெளி நிறுவகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற நிறுவகத்தின் 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 183,874 தொகையொன்று, 2017 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதார அமைச்சிடமிருந்து அறவிடவேண்டிய, 2009 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட ரூபா 915,750 தொகையான பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் 2015/2016 ஆம் ஆண்டிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,681,625 தொகையான வாடகை உள்ளடங்கலாக ரூபா 2,597,375 மொத்த தொகையொன்று, 2018 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 02 வருடங்களுக்கும் மேலதிகமாகப் பழைமையான ரூபா 3,906,266 நானாவித கடன்கொடுத்தோர் மீதியினை தீர்ப்பனவுசெய்வதற்கு மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | (i) உபகட்டுநிதி வழங்குகையில் பதவிநிலைத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவேண்டிய போதிலும், பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் 877 சந்தர்ப்பங்களில் நிறுவகத்தினால் உபகட்டுநிதிகள் அளிக்கப்பட்டிந்தது. |
| | (ii) தொடர்புடைய நோக்கம் பூர்த்தியானதன் பின்னர் உடனடியாக உபகட்டுநிதி தீர்ப்பனவுசெய்யப்பட்ட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டில், 32 சந்தர்ப்பங்களில் அளிக்கப்பட்ட ரூபா 1,274,190 கூட்டுத்தொகையான கட்டுநிதிகளின் தீர்ப்பனவுக்கு 32 வருடங்களிலிருந்து 155 நாட்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்தது. |
| | (iii) ஒரு தடவையில் அளிக்கக்கூடிய ஆகக் கூடிய உபகட்டுநிதியின் பெறுமதி ரூபா 100,000 ஆகக் காணப்பட்ட போதிலும், நிறுவகத்தினால் ரூபா 102,600 தொடக்கம் ரூபா 291,000 வரையான வீச்சில் 2017 ஆம் ஆண்டில் 16 சந்தர்ப்பங்களில் உபகட்டுநிதிகள் அளிக்கப்பட்டன. |
| (ஆ) 2004 யூலை 29 இன் பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் ரூபா 75,000,000 தொகையொன்று முதலிடப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>6.5.1 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரைபு அறிக்கையொன்று, நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 76,217,219 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 106,242,686 மிகையொன்றாகக் காணப்பட்டிருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 30,025,467 முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறுவகத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 58,327,754 இனால் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் செலவினத்திற்கான அரச மானியம் ரூபா 21,120,000 இனாலும் ஏனைய வருமானம் ரூபா 71,959,237 இனாலும் அதிகரித்தமை மேற்குறித்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்கையில், 2014 ஆம் ஆண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 5,945,485 பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்ட போதிலும், ஏனைய ஆண்டுகளில் மிகையொன்றை கொண்டிருந்தது. நிதிசார் விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பனவற்றை சீராக்கம் செய்த பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 105,259,530 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு, தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 277,292,999 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான 05 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரே நேரத்தில் 2017 ஆம் ஆண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படும் சாரதிப் பதவியிலுள்ள வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, இரண்டு மற்றும் மூன்று சாரதிகள் நிறுவகத்தினால் முறையே 2017 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து மே வரை மற்றும் யூன் இல் இருந்து திசெம்பர் வரை தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், அவற்றிற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 1,828,692 கூட்டுத்தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 02 வருடங்களை விடவும் பழமைவாய்ந்த ரூபா 414,621 பிடிகாசு, தீர்ப்பனவுசெய்யப்பட்டிருக்கவில்லை அல்லது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நன்கொடை நிதியின் (Endowment Funds) மீதி ரூபா 5,538,168 தொகை காட்டப்பட்டதுடன் குறித்த மீதி 24 நன்கொடை நிதிகளின் மீதிகளினை உள்ளடக்கியிருந்தது. எவ்வாறாயினும், அந்த நிதிகள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் நிதிகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 3,913,400 மானியமொன்று பெறப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்காமையினால், குறித்த தொகை அண்ணளவாக 05 வருடங்கள் காலப்பகுதியொன்று குறைப்பயன்பாட்டுடன் தொடர்ந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களினை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் ‘‘நிகழ்ச்சி நிரல்’’ 2030 இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனங்களும் செயற்படல் வேண்டும். எவ்வாறாயினும், மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் மீளாய்வாண்டு தொடர்பில், அதன் பரப்பெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகளினை அமுல்படுத்தும் முறைமையினை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவு மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகததின் உள்ளகக் கணக்காய்வினையும் மேற்கொள்கின்றது 2017 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேவுகை செய்வதற்கு நிறுவகத்தின் 13 விடயங்கள் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த விடயங்களில் ஒரு விடயத்திற்கு மாத்திரம் கணக்காய்வு ஐயவினாவொன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, நிறுவகத்தின் போதுமானதொரு உள்ளகக் கணக்காய்வு ேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீண்டெழும் செலவினத்தின் கீழ் காட்டாப்பட்ட 11 செலவின வகைகளின் உண்மை செலவினம் பாதிடப்பட்ட செலவினத்தை மிகைத்து 24 சதவீதம் தொடக்கம் 157 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) பயிற்சிப்பட்டறைகள் மற்றும் நிறுவகத்தின் விரிவுரையாளர்களுக்கான பாதிடப்பட்ட மதிப்பீட்டு செலவினம் ரூபா 1,000,000 ஆகக் காணப்பட்டிருந்ததுடன் அவற்றின் உண்மை செலவினம் ரூபா 7,315,974 ஆகக் காணப்பட்டிருந்தமையினால், மதிப்பிடப்பட்ட செலவினம் 632 சதவீதத்தினால் மிகைத்திருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டில் ஆதனக் கடன்கள், வெளிநாட்டுப் பிரயாணம் மற்றும் பட்டமளிப்பு விழாக்களுக்கு முறையே ரூபா 369,502, ரூபா 1,559,042 மந்றும் ரூபா 2,020,500 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும், இந்த செலவினத்திற்கான ஏற்பாடுகள் பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | முற்பணங்களின் கட்டுப்பாடு | முற்பணங்களின் எல்லையுடன் இணங்காமை மற்றும் உரிய காலப்பகுதியில் அவற்றை தீர்ப்பனவு செய்யத்தவறியமை. |
| (ஆ) | நிதிகளின் முகாமைத்துவம் | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு நிதிகளினைப் பயன்படுத்த தவறியமை. |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | காலத்திற்குக் காலம் பாதீட்டை மீளாய்வு செய்ய மற்றும் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தவறியமை. |
| (ஈ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | மீளாய்வாண்டிற்கு யதார்த்தமானதொரு செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தத் தவறியமை. |